**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066990

1. District மாவட்டம் : Chennai    PS காவல்நிலையம்: Zone 2 & [illegible]    Year ஆண்டு:    FIR No. மு.த.அ. எண்: 2/2019/AC/CB    Date நாள்: 25 10 2019.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018    Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (amendment) Act 2018
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல் : 24 10 2019    Date to நாள் வரை :
Time Period நேர அளவு :    Time from நேரம் முதல் : 24 10 2019 2000hrs.    Time to நேரம் வரை : 25 10 2019 0130hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25 10 2019    Time நேரம் : 12 30hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25 10 2019    Time நேரம் : 12 30hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    written (typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Coimbatore District Collector Office South approximately [illegible]
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Doraisamy    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Palaniappan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspection cell officer / Deputy Collector    (g) Address முகவரி District Collector Office Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. K. Mohan Babu s/o Kamaraj, Block Development officer, (village panchayat) union office, Periyanaickenpalayam, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
25.10.2019

15. Date & Time of despatch to the court: 25.10.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. Vijayalakshmi
Rank: நிலை Inspector No. எண் ..........
Vigilance and Anticorruption
Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

Contents of FIR in Cr.No.21/2019/AC/CB u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 .

இன்று 25.10.2019 காலை 12.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் எம்.விஜயலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.21/2019/AC/CB u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயமுத்தூர் ந.க.எண்.383/2019/ஐ1 நாள் 25.10.2019 அய்யா, பொருள்- திடீர் தணிக்கை கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரின் அரசு வாகனத்தை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக, கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஆகப்பணிபுரிந்துவரும் திரு.K.மோகன் பாபு என்பவர் தனது அலுவலகத்தில் அலுவல் முடித்து வாகனத்தில் செல்லும் நேரத்தில், போகும் வழியில் தனக்கு கீழ் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்களிடமும் ஒப்பந்த தாரர்களிடமும் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளுக்காக லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், அவ்வாறு பணம் பெற்ற பின்பு கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் அவரது சொந்த காரில் மேற்படி பணத்துடன் பொள்ளாச்சியில் உள்ள அவரது வீட்டிற்கு செல்வார் என்று கிடைத்த தகவலின் படி திடீர் தணிக்கைக்காக வேண்டி 24.10.2019-ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தென்மேற்கு பகுதியில் திரு. K.மோகன்பாபு என்பவரது Alto K 10 TN 41 AJ 8140 கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு அருகாமையில் 24.10.2019-ம் தேதி இரவு சுமார் 9

மணியிலிருந்து காத்திருந்தபோது அந்த இடத்திற்கு சுமார் 10 மணியளவில் அரசு வாகனம் TN 40 G 0031-ல் திருமதி. S.சாந்தி என்பவர் அந்த அரசு வாகனத்தை ஓட்டிக்கொண்டு அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போது மேற்கொண்ட திடீர் தணிக்கையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவந்தது. திரு. K.மோகன்பாபு என்பவர் தனது அலுவலகத்திலிருந்து இரவு 9 மணிக்கு புறப்பட்டுள்ளார். பின்னர் அவரது வண்டியில் அசோகபுரம் ஊராட்சி செயலாளர் திரு.லீலா கிருஷ்ணன் என்பவர் என்.ஜி.ஜி.ஓ காலனி அருகே ஏரி துடியலூர் வரை அந்த அரசு வாகனத்தில் நடுவிலுள்ள இருக்கையில் அமர்ந்து பயணித்துள்ளார். துடியலூர் அருகில் திரு.K.மோகன்பாபுவும் திரு.லீலாகிருஷ்ணன் ஆகியோர்கள் அரசு வாகனத்தில் இருந்து கீழே இறங்கி சிறிது தள்ளி தனிமையில் பேசிக்கொண்டு இருந்துள்ளனர். அதன்பின்பு திரு.லீலா கிருஷ்ணன் தனியாக சென்றுள்ளார். திரு.K.மோகன்பாபு மட்டும் வாகனத்தில் மீண்டும் ஏறி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி வந்துள்ளார். பின்னர் திரு.லீலா கிருஷ்ணன் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.K.மோகன்பாபுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது அரசு வாகனத்தை நிறுத்தச் சொல்லி அந்த அரசு வாகனம் நிறுத்தப்பட்ட பின் மோகன்பாபுக்கான ஸ்வீட் பாக்ஸ்-ஐ ஓட்டுநர் திருமதி.சாந்தி மூலமாக கொடுத்துள்ளார். திடீர் தணிக்கையின் போது தணிக்கை குழுவினரை பார்த்தபின்பு திரு.K.மோகன்பாபு தனது இடது புற பேன்ட் பாக்கெட்டில் இருந்து கத்தையாக பணத்தை எடுத்து அந்த அரசு வாகனத்தில் அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு பின்புறமாக நடுவிலுள்ள சீட்டில் போடப்பட்ட சீட் கவருகுள்ளே வைத்துள்ளார். திடீர் தணிக்கை குழுவினர் மேற்படி பணத்தினை கண்டுபிடித்து எண்ணி பார்க்க ரூ.45000/- இருந்தது. மேற்படி பணம் தன்னுடையது அல்ல என்றும், அது எவ்வாறு வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் ஓட்டுநர் திருமதி.சாந்தி என்பவர் கொடுத்த வாக்கு மூலத்தில் இருந்து மேற்படி பணத்தை திரு.மோகன் பாபு என்பவர் தான் சீட் கவரில் வைத்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. மேலும் அவர் அமர்ந்திருந்த இருக்கையில் இருந்து ஒரு துண்டு சீட்டு கண்டெடுக்கப்பட்டது. அந்த சீட்டில் 7832500062801 என்றும் KARB 0000783 என்றும் 2000 என்றும் எழுதப்பட்டிருந்தது. திடீர் தணிக்கை விவரம் குறித்து ஒரு நடவடிக்கையை 24.10.2019-ம் தேதி இரவு 11.15 மணி முதல் 25.10.2019-ம் தேதி 01.30 மணி வரை தயார் செய்து அதில் அனைத்து விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. திடீர் தணிக்கையின் போது மேற்கண்ட அரசு

வாகனத்திலிருந்து பணம் ரூபாய் 45,000/- மற்றும் துண்டு சீட்டு கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை, கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய் 45,000/- மற்றும் துண்டு சீட்டு ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு:1)நடவடிக்கை குறிப்பு, 2)கைப்பற்றப்பட்ட பணம் ரூ.45.000/-, 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், 4)கைப்பற்றப்பட்ட ஆவணம். (Sdxxxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயமுத்தூர். Sir, received the complaint on 25.10.2019 at 12.30hrs and registered a case in Coimbatore V & AC Cr.No.21/2019/AC/CB u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 (Sdxxxxxx) M.Vijayalkshmi, Inspector of Police, V&AC, Coimbatore. இதன் முதல் தகவல்அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

(எம்.விஜயலட்சுமி) 25/10/2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.